[8th August 1966

கனம் சபாநாயகர் : அப்படியானால், இரண்டு பேரும் அடுத்த வருஷம் பார்லிமெண்டுக்குப் போகிறீர்கள் ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அடுத்த வருஷம் பதில் 'சொல்வார் கள்' என்று தான் சொன்னேன்.

புஞ்சை நிலங்களை நஞ்சையாக மாற்றம்

*224 கேள்வி.—**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

தண்ணீர் தண்டத் தீர்வைக்கு உட்பட்டுள்ள புஞ்சை, ஒரு போக நஞ்சை நிலங்களை, நஞ்சை நிலங்களாக மாற்றி லோக்கலைஸ் செய்யும் திட்டம் எப்பொழுது பூர்த்தியாகும் ?

THE HON. SRI V. RAMAIAH : There is no such scheme. In all cases where dry lands are assessed to water cess and where the lands can be transferred to wet lands, the Collectors have got power to effect the change of classification.

திரு. எம். எஸ். செல்வராஜன் : திருநெல்வேலி ஜில்லாவைப் பொறுத்தமட்டில் புஞ்சையாக இருந்து நஞ்சையாகப் பயிராகிக் கொண்டிருக்கிற நிலம் எவ்வளவு? தண்டத் தீர்வை விதிக்கப் பட்டுள்ளதன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு ? அமைச்சர் அவர்கள் கால்வாய்கள் புனரமைப்பு முடிந்தவுடன் லோகலைஸ் செய்யப்படும் என்று உறுதிமொழி கொடுத்தார்கள். இவை எப்போது பூர்த்தி செய்யப்படும்.

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்த ஜில்லாவைப் பொறுத்த மட்டில் புள்ளிவிவரம் இல்லை.

In all cases where dry lands are assessed to water cess and where the lands can be transferred to wet lands, the Collectors have got the powers to effect the change of classification.

என்ற முறையில் அவர் கேட்கக்கூடிய தகவல்படி கலெக்டர்களுக்கு அதிகாரம் இருக்கிறது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : திருநெல்வேலி ஜில்லாவைப் பொறுத்தமட்டில் பிசான காலத்தில் புஞ்சை நிலங்களில் பயிர் செய்யப்பட்டிருந்தால் இரண்டு ரேட் தண்ணீர்த் தீர்வை கட்ட வேண்டும். கார் காலத்திலும் அட்வான்ஸ் கார் காலத்திலும் ஒரு ரேட் தீர்வைத்தான். பிசான காலப் பயிருக்கும் கார்காலப் பயிரைப் போல ஒரு ரேட் தீர்வை வசூல் செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினர் அவர்கள் ஸ்பெசிபிக்காக திருநெல்வேலி ஜில்லாவைப் பொறுத்தமட்டில் ஒரு கேள்வியைப் போட்டால் பதில் சொல்ல முடியும்.